## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

(2002, யூன் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2002, யூன் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. — ஒ. 24/2002
4686

**2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வருமான விவரத் திரட்டொன்றை அல்லது வருமானத்தின் முழு விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாத ஆட்கள் அது தொடர்பில் வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதனை இயலச் செய்வதற்கும் ; அத்தகைய ஆட்கள் வருங்காலத்தில் வரிச்சட்டங்களுக்கு இணங்கியொழுகச் செய்யும் நோக்கத்துடன் அது தொடர்பில் குறித்தசில வரிகளை செலுத்துவதற்கான பொறுப்புக்கெதிராகவும் மற்றும் புலனாய்வுகள், குற்ற வழக்குகள் அல்லது தண்டத்திற்கெதிராகவும் அத்தகைய ஆட்களுக்கு நட்டோத்திரவாதமளிப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப்பெயர்.*

2. வருமானவரி விதிப்பனவு தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகியுள்ள வரும் அத்துடன் அத்தகைய காலப்பகுதி தொடர்பில் வருமான வரிக்கு ஆளாகியுள்ள அவரது வருமானம் தொடர்பான அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பான விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாதுள்ளவரும் அத்துடன் —

*வெளிப்படுத்தப் படாத வருமானம் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துகை செய்யப்படுதல்.*

(அ) 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் குறிக்கின்ற பணங்களை —

(i) கமத்தொழிலில், கைத்தொழிலில் அல்லது பயன்பாட்டுச் சேவைகளில் ; அல்லது

(ii) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும் பிணையங்களும் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ் வழங்கப்படும் ஏதேனும் பிணையத்தில்,

முதலீடு செய்கின்றவரும் ; அல்லது

(ஆ) அத்தகைய வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவில் அல்லது கைத்தொழில், வர்த்தக, கமத்தொழில் அல்லது வதிவிட நோக்கங்களுக்காக கட்டடங்களை நிருமாணிப்பதில் முதலீடு செய்துள்ளவரும்,

ஆன எவரேனுமாள், அதற்கான எண்பிப்புடன் அத்தகைய முதலீடு அல்லது கொள்வனவு பற்றிய எல்லா விபரங்களையும் கொடுத்து, அது தொடர்பிலான வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதி பதிக்குச் செய்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகையானது, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முதலீடொன்றின் விடயத்தில், அத்தகைய முதலீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதக் காலப் பகுதியினுள் அல்லது 2003 மே 31 ஆம் தேதிக்கு முன்னரும் இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அத்தேதிக்கு முன்னர் அத்துடன் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கொள்வனவு அல்லது நிர்மாணமொன்றின் விடயத்தில், 2003 மே 31 ஆம் தேதிக்கு முன்னரும் செய்யப்படுதல் வேண்டும்.

வெளிப்படுத்துகையைச் செய்கின்றவரான ஆள் வருமானவரிக்கு அல்லது வருமானவரியின் மீதான மிகைவரிக்கு ஆளாதலாகாது.

3. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆளொருவர் வெளிப்படுத்துகையொன்றைச் செய்து அத்தகைய முதலீடு, கொள்வனவு அல்லது நிருமாணம் தொடர்பிலான எண்பிப்பை ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அளிக்குமிடத்து, அத்தகைய ஆள் —

(அ) முதலீடானது கமத்தொழிலில், கைத்தொழிலில் அல்லது பயன்பாட்டுச்சேவைகளில் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும் பிணையங்களும் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தில் ஆனதாகவிருக்குமிடத்து, அத்தகைய ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஏதேனும் மேலதிக வருமான வரியின் அல்லது வருமான வரியின்மீதான மிகைவரியின் கொடுப்பனவுக்கு ஆளாதலாகாது ;

(ஆ) அத்தகைய வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் குறிக்கின்ற பணங்கள் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவுக்காக அல்லது கைத்தொழில், வர்த்தக, கமத்தொழில் அல்லது வதிவிட நோக்கங்களுக்காகக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளவிடத்தும் அத்தகைய ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஏதேனும் மேலதிக வருமானவரியின் அல்லது வருமானவரியின் மீதான மிகைவரியின் கொடுப்பனவுக்கு ஆளாதலாகாது.

**4.** இரண்டாம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றவரும் அத்துடன் அது தொடர்பில் எண்பிப்பை அளிக்கின்றவருமான எவரேனுமாள், ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் வருமானவரியின் அல்லது வருமானவரியின் மீதான மிகைவரியின் விதிப்பனவுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்காக, ஏதேனும் புலனாய்வுக்கோ, தண்டத்துக்கோ அல்லது குற்றவழக்குக்கோ ஆளாதலாகாது.

*வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆள், ஏதேனும் புலனாய்வுக்கு, தவறுக்கான தண்டத்துக்கு அல்லது குற்றவழக்குத் தொடுப்புக்கு ஆளாதலாகாது.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

*பொருள்கோடல்.*

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும் ; அத்துடன்

"வெளிப்படுத்தப்படாத இலாபங்களும் வருமானமும்" என்பது, எந்த வருமானவரி தொடர்பில் ஆளொருவர் வருமானத்தின் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவவில்லையோ அல்லது அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்படவில்லையோ அந்த, வருமானவரியின் விதிப்புக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டத்தின்கீழ் வருமானவரி இறுக்கப்படற்பாலதாகவுள்ள எவையேனும் இலாபங்களும் வருமானமும் என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.